FMS

# மேல்நிலை இரண்டாமாண்டு – திருப்புதல் தேர்வு – 2021

12 - ஆம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

காலம் : 3 .00 மணி மதிப்பெண்கள் : 90

குறிப்பு : 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 20 X 1 = 20

1. முழுமை பெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
   அ) நிறுமம் ஆ) அரசு இ) சிறிய அளவிலான தனி ஆள் வணிகம் ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்
2. நிலை அறிக்கை ஒரு அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு
3. தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது அ) தொடக்க முதல் கண்டறிய
   ஆ) இறுதி முதல் கண்டறிய இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய
4. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள் அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்
5. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
   அ) பெயரளவு கணக்கு ஆ) சொத்துக் கணக்கு இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
6. பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதிப்படுவதல்லை?
   அ) பழைய செய்தித்தாள்கள் விற்றது ஆ) சொத்து விற்பனை மீதான நட்டம்
   இ) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம் ஈ) அறைகலன் விற்ற தொகை
7. நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா இன்னும் பெறாதது
   அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு இ) ஒரு செலவு ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று
8. உயில் கொடை ஒரு
   அ) வருவாயினச் செலவு ஆ) முதலினச் செலவு இ) வருவாயின வரவு ஈ) முதலின வரவு
9. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது முதல் மீது வட்டி அ) வழங்கப்படுவதில்லை
   ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும் இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்
10. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
    அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள் இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்
11. பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
    அ) எடுப்புகள் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
    ஆ) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
    இ) கடன் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
    ஈ) இலாப பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
12. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது? அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து
    ஆ) நற்பெயர் ஒரு நட்டம் சொத்து இ) நற்பெயர் ஒரு கற்பனை சொத்து ஈ) நற்பெயரினை வாங்க முடியாது
13. ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாப விகிதமாக கருதப்படுவது அ) சராசரி இலாபம்
    ஆ) சாதாரண இலாப விகிதம் இ) எதிர் நோக்கும் இலாப விகிதம் ஈ) இவைகளில் எதுவுமில்லை
14. சராசரி இலாபம் ரூ. 25,000 மற்றும் சாதாரண இலாபம் ரூ. 15,000 ஆக இருக்கும் போது உயர் இலாபம்
    அ) ரூ. 25,000 ஆ) ரூ. 5000 இ) ரூ. 10,000 ஈ) ரூ. 15,000
15. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு அ) சொத்து க/கு ஆ) பெயரளவுக் க/கு இ) ஆள்சார் க/கு ஈ) ஆள்சாரா க/கு
16. மறுமதிப்பிட்டில் சொத்துக்களின் மதிப்பு உயர்வது
    அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) செலவு ஈ) இவற்றுள் எதுவுமில்லை
17. கூட்டாளிகளின் புதிய இலாப பகிர்வை விட பழைய இலாப பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது
    அ) முதல் விகிதம் ஆ) தியாக விகிதம் இ) ஆதாய விகிதம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை
18. கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின் போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கும் இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது அ) புதிய இலாப பகிர்வு விகிதம்
    ஆ) பழைய இலாப பகிர்வு விகிதம் இ) ஆதாய விகிதம் ஈ) தியாக விகிதம்
19. மறுமதிப்பீட்டின் போது, பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது
    அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
20. ஒரு கூட்டாளி விலகலின் போது ஆதாய விகிதத்தின் நிர்ணயம் எதற்கு தேவைப்படுகிறது?
    அ) மறுமதிப்பிட்டு இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவதற்கு ஆ) பகிர்ந்து தாரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பகிர்ந்தளிப்பதற்கு இ) நற்பெயுரை சரிக்கட்டுவதற்கு ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

II எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 X 2 = 14

21. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?
22. உயிர் கொடை என்றால் என்ன?
23. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
24. உயர் இலாபம் என்றால் என்ன?
25. ஆதாய விகிதம் என்றால் என்ன?
26. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையை காணவும்.

| | | |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | ரூ. | 1,00,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | ரூ. | 2,30,000 |



Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in

| | | |
|---|---|---|
| அளித்த தள்ளுபடி | ரூ. | 5,000 |
| உள் திருப்பம் | ரூ. | 25,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | ரூ. | 1,20,000 |

27. பின்வரும் விவரங்கள் தூத்துக்குடி இளம் முன்னோடிகள் சங்கத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.
சங்கத்தில் 100 உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொரு வரும் ரூ. 25 ஆண்டுச் சந்தாவாக செலுத்துகின்றனர். ஆண்டிறுதியில் 10 உறுப்பினர்கள் சந்தா செலுத்தாமல் இருந்தனர். ஆனால் நான்கு உறுப்பினர்கள் அடுத்த ஆண்டிற்கான சந்தா தொகையை முன் கூட்டிச் செலுத்தி இருந்தனர்.

28. மணி என்ற கூட்டாளி 2018 செப்டம்பர் 1 அன்று ரூ. 30,000 எடுத்துக் கொண்டார் எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018 டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

29. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 2014 | ரூ. | 10,000 |
| 2017 | ரூ. | 13,000 |
| 2015 | ரூ. | 11,000 |
| 2016 | ரூ. | 12,000 |

30. தீனா, சூர்யா மற்றும ஜானகி என்ற கூட்டாளிகள் 5 : 3 : 2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31.03.2018 அன்று தீனா கூட்டாண்மையை விட்டு விலகினார். அவருடைய விலகலின் போது நிறுவனத்தின் கணக்கேடுகள் ரூ. 50,000. காப்பு நிதியினைக் காட்டியது. காப்பு நிதியினை மாற்றுவதற்கு தேவையான குறிப்பேட்டு பதிவினை தரவும்.

**III எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 7 X 3 = 21

31. இரட்டை பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யவை? ஏதேனும் மூன்று மட்டும்.
32. இலாப நோக்கமற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.
33. நிலை முதலுக்கும மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகள் ஏதேனும் மூன்றை மட்டும் தரவும்.
34. நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.
35. பின்வரும் விவரங்களிலிருந்து கடன் கொள்முதலை கணக்கிடவும்.

| | | |
|---|---|---|
| தொடக்க கடனீந்தோர் | ரூ. | 1,70,000 |
| கொள்முதல் திருப்பம் | ரூ. | 20,000 |
| கடனீந்தோருக்கு செலுத்தியது | ரூ. | 4,50,000 |
| இறுதி கடனீந்தோர் | ரூ. | 1,90,000 |

36. பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | | |
|---|---|---|
| 1.4.2018 அன்று எழுது பொருள்கள் இருப்பு | ரூ. | 2,600 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுது பொருள்கள் | ரூ. | 6,500 |
| 31.3.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | ரூ. | 2,200 |

37. கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ரூ. 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும. எடுப்புகள் மீது வட்டி சாராசரி கால முறையப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்
1) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்
2) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தார்
3) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தார்.

38. பின்வரும் விவரங்களிலிருந்து. உயர் இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| | | |
|---|---|---|
| அ) நிறுவனத்தின் மொத்த சொத்துக்கள் | ரூ. | 5,00,000 |
| ஆ) நிறுவனத்தின் பொறுப்புகள் | ரூ. | 2,00,000 |
| இ) இவ்வகை தொழில்களின் சாதரண இலாப விகிதம் | ரூ. | 12.5% |
| ஈ) நிறுவனத்தின் சராசரி இலாபம் | ரூ. | 60,000 |

39. பிரவிணா மற்றும் தான்யா என்ற இரு கூட்டாளிகள் 7 : 3 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தை பகிர்ந்து வந்தனர். அவர்கள் மாலினி என்பவரை கூட்டாண்மையில சேர்த்துக் கொண்டனர். பிரவிணா, தான்யா மற்றும் மாலினி அவர்களின் புதிய இலாப விகிதம் 5 : 2 : 3 தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

40. மணி, கனி மற்றும் சோனி என்ற கூட்டாளிகள் தாங்கள் இலாபங்களை 4 : 5 : 6 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். மணி என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 X 5 = 35

41. அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையை கணக்கிடவும்.

| | | |
|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | ரூ | 2,50,000 |
| 2018 ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | ரூ. | 60,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | ரூ. | 7,25,000 |
| பெறுதற்குரிய மாற்று சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | ரூ. | 1,60,000 |
| வாராக்கடன் | ரூ. | 30,000 |
| பெறுதற்குரிய மாற்று சீட்டு மறுக்கப்பட்டது. | ரூ. | 15,000 |



Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

| | | |
|---|---|---|
| உள்திருப்பம் | ரூ. | 50,000 |
| 2019 மார்ச 31 அன்று பெறுதற்குரிய மாற்று சீட்டு | ரூ. | 90,000 |
| 2019 மார்ச 31 அன்று பற்பல கடனாளிகள் | ரூ. | 2,40,000 |
| ரொக்க விற்பனை | ரூ. | 3,15,000 |

**(அல்லது)** ஆ) வினோத், கார்த்தி மற்றும் பிரணவ் என்ற கூட்டாளிகள் 2 : 2 : 1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர்.

2018, ஏப்ரல் 1 அன்று பிரணவ் என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின் போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.

1) நிலம் மற்றும் கட்டத்தின் மதிப்பை ரூ. 18,000 அதிகரிக்க வேண்டும்.

2) இயந்திரத்தின் மதிப்பை ரூ. 15,000 குறைக்க வேண்டும்.

3) கொடுபட வேண்டிய செலவுகளுக்கு ரூ. 8,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்பேட்டு பதிவுகள் தந்து மறுமதிப்பிட்டுக் கணக்கினை தயாரிக்கவும்.

42. அ) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ரூ. | செலுத்துதல்கள் | ரூ. |
|---|---|---|---|
| ***தொடக்க இருப்பு :*** | | | |
| கை ரொக்கம் | 14,000 | சம்பளம் | 20,000 |
| வட்டிப் பெற்றது | 5,000 | வாடகை | 24,000 |
| சந்தா | 55,000 | பயண செலவுகள் | 2,000 |
| உயில்கொடை | 48,000 | அச்சு மற்றும் எழுது பொருள் | 6,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| அறைகலன் விற்றது | 16,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |
| (ஏட்டு மதிப்பு ரூ. 17,000) | | கை ரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

**(அல்லது)** ஆ) செல்வம் மற்றும் செந்தில் இருவரும் 2 : 3 என்ற விகிதத்தில இலாபம் பகிரும் கூட்டாளிகள். இதில் சிவா என்பவர் 1/5 பங்கு விகிதத்தில் கூட்டாளியாக சேருகிறார். சிவா, இப்பங்கினை செல்வம் மற்றும் செந்தில் இருவரிடமும் சமமாக பெறுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கண்டறியவும்.

43. அ) மயிலாடுதுறை மனமகிழ் மன்றத்தின் கீழ்காணும் தகவல்களிலிந்து 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கை தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு | 15000 | காவலாளிக்குச் சம்பளம் கொடுத்தது | 12,000 |
| தொடக்க வங்கி இருப்பு | 25,000 | மன்ற ஆண்டு விழாச்செலவுகள் | 15,000 |
| நன்கொடைகள் பெற்றது | 48,000 | ஒளியூட்டுச் செலவுகள் | 16,500 |
| பழைய உபகரணங்கள் விற்றது | 26,000 | பொழுது போக்குச் செலவுகள் | 13,500 |
| சிற்றுண்டிச் செலவுகள் | 13,000 | பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது | 5,000 |
| மன்ற ஆண்டு விழா வசூல் | 18,000 | அறக்கொடை நாடகக் காட்சி செலவுகள் | 3,000 |
| டென்னிஸ் மைதான கட்டுமானச் செலவுகள் | 7000 | முதலீடுகள் விற்றது | 12,000 |
| அறக்கொடை நாடகக் காட்சி வசூல் | 4000 | இறுதி ரொக்க இருப்பு | 12,000 |
| வாடகைச் செலுத்தியது | 1000 | | |

**(அல்லது)** ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு, ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

1) சராசரி இலாபம் ரூ. 14,000.
2) சாதாரண இலாபம் ரூ. 4,000
3) சாதாரண இலாப விகிதம் 15%.
4) நற்பெயருக்கான் கொள்முதல் ஆண்டுகள் 5

5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 15% என்ற வட்டி விகிதத்தில் ரூ. 1ன் தற்போதைய ஆண்டுத் தொகை மதிப்பு ரூ. 3,352.

44. அ) அகமது மற்றும் பஷீர் வழங்கிய முதல் முறையே ரூ. 60,000 மற்றும் ரூ 40,000 அவர்களின் இலாப பகிர்வு விகிதம் 2 : 1 அவ்வாண்டின் முதல் மீது வட்டி கணக்கிடுவதற்கு முன் இலாபம் ரூ. 5,000.

பின்வரும் நிலைகளில் முதல் மீதான வட்டி தொகையை கணக்கிடவும்.

1) முதல் மீது வட்டி குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிப்பிடாத போது.

2) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% அனுமதிக்கப்படும் போது

3) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்கப்படும் போது **(அல்லது)**

ஆ) ரோஜா, நீலா மற்றும் கனகா என்ற கூட்டாளிகள் 5 : 4 : 3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர்.

2017 ஏப்ரல் 1 அன்று ரோஜா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின் போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்வதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டன.

1) கட்டடத்தின் மதிப்பில் ரூ. 30,000 அதிகரிக்க வேண்டும்.

2) சரக்கிருப்பு மதிப்பில் ரூ 5,000 மற்றும் அறைகலன் மதிப்பில் ரூ. 12,000 குறைக்க வேண்டும்.

3) கொடுபடா பொறுப்புகளுக்கு ரூ. 1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும். குறிப்பேட்டு பதிவுகள் தந்து மறுமதிப்பிட்டுக் கணக்கினை தயாரிக்கவும்.

45. அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த கடனாளிகள் க/கு, மொத்த கடனீந்தோர் க/கு பெறுதற்குரிய மாற்று சீட்டு மற்றும்



Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929

www.kalvikadal.in https://material.kalvikadal.in

செலுத்துதற்குரிய மாற்று சீட்டு தயாரிப்பது மொத்த விற்பனை மற்றும் மொத்த கொள்முதல் கணக்கிடவும்.

| 2018 ஏப்ரல் 1 அன்று இருப்புகள் | ரூ. | 2019 மார்ச் 31 அன்று இருப்புகள் | ரூ |
|---|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 2,40,000 | பற்பல கடனாளிகள் | 2,20,000 |
| பெறுதற்குரிய மாற்று சீட்டு | 30,000 | பற்பல கடனீந்தோர் | 1,50,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,20,000 | பெறுதற்குரிய மாற்று சீட்டு | 8,000 |
| செலுத்தற்குரிய மாற்று சீட்டு | 10,000 | செலுத்தற்குரிய மாற்று சீட்டு | 20,000 |

***பிற தகவல்கள் :***

| | |
|---|---|
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 6,00,000 |
| வாடிக்கையாளருக்கு அளித்த தள்ளுபடி | 25,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 3,20,000 |
| சரக்களித்தோரால் அளிக்கப்பட்ட தள்ளுபடி | 10,000 |
| செலுத்தற்குரிய மாற்று சீட்டுக்கு செலுத்தியது | 30,000 |
| பெறுதற்குரிய மாற்று சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 60,000 |
| பெறுதற்குரிய மாற்று சீட்டு மறுக்கப்பட்டது | 4,000 |
| வாராக்கடன் | 16,000 |

***(அல்லது)*** ஆ) பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | | |
|---|---|---|
| மட்டைகள் மற்றும் பந்துகள் தொடக்க இருப்பு | ரூ. | 3,000 |
| அவ்வாண்டில் வாங்கிய மட்டைகள் மற்றும் பந்துகள் | ரூ. | 17000 |
| பழைய மட்டைகள் மற்றும் பந்துகள் விற்பனை | ரூ. | 2,000 |
| மட்டைகள் மற்றும் பந்துகள் இறுதி இருப்பு | ரூ. | 4,000 |

46. சுபா மற்றும் சுதா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை 2 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்களின் பின்வரும் இருப்பு நிலைக் குறிப்பிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% கணக்கிடவும்.

**2018 டிசம்பர் 31 இருப்பு நிலைக் குறிப்பு**

| பெறுதல்கள் | ரூ | | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| சுபா | 40,000 | | நிலை சொத்துக்கள் | 70,000 |
| சுதா | 60,000 | 1,00,000 | நடப்புச் சொத்துக்கள் | 50,000 |
| நடப்பு பொறுப்புகள் | | 20,000 | | |
| | | 1,20,000 | | 1,20,000 |

அவ்வாண்டில் சுபா மற்றும் சுதாவின் எடுப்புகள் முறையே ரூ. 8,000 மற்றும் ரூ. 10,000 அவ்வாண்டில் ஈட்டிய இலாபம்ரூ.30000. ***(அல்லது)*** ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து, உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

அ) சாதாரண இலாப விகிதம் 10%. ஆ) கடந்த 4 ஆண்டுகளின் இலாபங்கள் ரூ. 30,000, 40,000, 50,000, 45,000

இ) மேற்குறிப்பிடப்பட்ட இலாபம் ரூ. 30,000 ல் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ. 3,000 சேர்ந்துள்ளது.

ஈ) சராசரி பயன்படுத்தப்பட்ட முதல் ரூ. 3,00,000.

47. அ) ஜான், ஜேம்ஸ் மற்றும் இராஜா என்ற கூட்டாளிகள் முறையே சமமாக இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31.03.19 ம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | அலுவலக சாதனங்கள் | | 70,000 |
| ஜான் | 80,000 | 70,000 | இயந்திரம் | | 1,40,000 |
| ஜேம்ஸ் | 60,000 | | பற்பல கடனாளிகள் | 52,000 | |
| இராஜா | 1,00,000 | 2,40,000 | (-) வாரா ஐயக்கடன் ஒதுக்கு | 2000 | 50,000 |
| பற்பல கடனீந்தோர் | | 1,20,000 | சரக்கிருப்பு | | 60,000 |
| | | | வங்கி ரொக்கம் | | 40,000 |
| | | 3,60,000 | | | 3,60,000 |

2019 மார்ச் 31 ம் நாளன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

1) இயந்திரம் ரூ. 1,30,000 ஆக மதிப்பிடுவது.
2) அலுவலக சாதனங்கள் மதிப்பை ரூ. 2,000 குறைப்பது
3) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ. 3,000 ஆ உயர்த்துவது
4) ஏடுகளில் பதிவு பெறாமல் உள்ள முதலீடுகள் ரூ. 25,000 பதிவு செய்ய வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும். ***(அல்லது)***

ஆ) ஸ்ரீ தேவி நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 4 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

அ) டிசம்பர் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018 - ன் இலாபங்கள் முறையே ரூ. 1,75,000, 1,50,000 மற்றும் 2,00,000.

ஆ) 2016 - ம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ 45,000 சேர்ந்துள்ளது

இ) 2017 - ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ரூ. 30,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.



Please send your Materials & Question Papers to kalvikadal.in@gmail.com (OR) Whatsapp - 9385336929